MUNICIPAL COUNCIL
JAFFNA

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 27 ஜுல்கஃ 3 இதழ் 150

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-7-1986

கொழும்பில்

## ஹோட்டல் முன் குண்டுவீச்சு மூவர் பலத்த காயம்

கொழும்பு, வியாழன்.

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் முன்னால் குண்டொன்று வெடித்ததில் ஹோட்டல் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் உட்பட மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

நேற்றிரவு 7-30மணியளவில் நிகழ்ந்த மேற்படி சம்பவத்தில் ஹோட்டலுக்கு முன்பாக வேகமாகவந்த காரொன்றிலிருந்து இந்த பார்சல் குண்டு வீசப்பட்டதாகவும் இதன் போதே இவர்கள் பலத்த காயங்களுக் குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து நகரில் பெரும்பதற்றம் நிலவியது.

இதேவேளை கொழும்பு வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த ஹோட்டலிலேயே தங்க திட்டமிட்டிருந்தனர் என்று பி. பி ஸி செய்தி தெரிவிக்கின்றது. (பி)

● ராணுவ அனுமதிப்பத்திர முறைக்கு எதிர்ப்பு

# பளைக்கு அப்பால் இன்றுமுதல் சகல வாகனங்களும் செல்லாது

## லொறி உரிமையாளர் சங்கம் முடிவு

(ஐ. சண்முகலிங்கம்)

பலாலி இராணுவ முகாமில் அனுமதிப்பத்திரம் பெற்றுத்தான் வாகனங்கள் கொழும்புக்குச் செல்லவேண்டும் என்ற நடைமுறை இரத்துச் செய்யப்பட்டு முன்னர் இருந்த நடைமுறை அமுல்படுத்தப்படும் வரை எந்த ஒரு வாகனத்தையும் பளைக்கு அப்பால் எடுத்துச் செல்வதில்லையென்று வடபிரதேச லொறி உரிமையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

இன்றுமுதல் லொறிகள் உட்பட சகல வாகனங்களும் பளைக்கு அப்பால்போக அனுமதிப்பதில்லை என்றும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரும் வாகனங்களையும் திரும்பிச் செல்ல அனுமதிப்பதில்லை என்றும் வடபிரதேச லொறி உரிமையாளர்சங்கம் நேற்று யாழ் ஹோட்டல் ஞானம்ஸ்சில் கூடி முடிவு எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து கொழும்பு செல்லும் லொறி உட்பட சகலவாகனங்களும பலாலி இராணுவ முகாமில அனுமதிப்பத்திரம் பெற்றுச் செல்லவேண்டும் என்ற நடைமுறையை எதிர்க்கும் நோக்குடனேயே லொறி உரிமையாளர் சங்கம் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிரதேச பஸ்களும் வருகிற ஞாயிறு முதல் பளைக்கு அப்பால் செல்லாமல் தடுக்கும் நோக்குடன் அச்சபையினருடன் கலந்தாலோசிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பளையில் இருந்து கொழும்புக்குச் செல்ல முயற்சிக்கும் வாகனங்களைத் தடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு செல்லும் வாகனங்களுக்கு இராணுவத்தின

(5ம் பக்கம் பார்க்க)

ஜுலை 14ல்

## ஹர்த்தாலும், ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்த முடிவு

யாழ்ப்பாணம் வெள்ளி

கொழும்பு செல்லும் லொறிகளுக்கும், வாகனங்களுக்கும் இராணுவத்தில் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்ற அரசாங்கத்தின் விதியை எதிர்த்து எதிர் வரும் திங்கட்கிழமை சகல வர்த்தக ஸ்தாபனங்களும், பாடசாலைகளும் ... பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதென வடபிரதேச லொறி உரிமையாளர் சங்கமும, முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் முடிவு செய்துள்ளன.

நேற்றுக் காலை யாழ். ஹோட்டல் ஞானம்ஸ்சில் மேற்படி சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது

திங்கட்கிழமை நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் இருந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினை நடாத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போராட்டத்திலும், ஹர்த்தாலிலும் சகல மக்களும் பங்கு பற்றுமாறு சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. (ஐ)

● கந்தளாயில்

## படையினர் தாக்குதல் 12 பேர் பலி; 8 பேர் காயம்

[நமது விசேட நிருபர்]

திருமலைமாவட்டத்திலுள்ள கந்தளாய் 9ம் கொலனியில் வீடுகளில் இருந்த தமிழ்க்குடும்பங்கள்மீது ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பெண்கள் உட்பட 12பேர் பலியானுர்கள், 8பேர் படுகாயமுற்ருர்கள்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

திருமலையிலிருந்து 14 மைல் தொலைவில் கந்தளாய்க்கும் தம்பலகாமத்திற்கு மிடையில் முள்ளிப்பொத்தானைக் கிராமம் உள்ளது.

இக்கிராமத்தில் 9ம்கொலனியில் முஸ்லிம்களும் தமிழர்களும், சிங்களவர்களும் வசிக்கிருர்கள்.

ஆயுதப்படையினரும் ஊர்

(5ம் பக்கம் பார்க்க)

## குருநகரில் நினைவு ஸ்தூபி

யாழ்ப்பாணம் வெள்ளி

படுகொலை செய்யப்பட்ட குருநகர் கடற்றொழிலாளரின் 31ம் நாள் நினைவையொட்டி குருநகரில் 31 அடி உயரமான ஸ்தூபியினை மறை மாவட்ட முதல்வர் மைக்கல் சாமி அடிகள் திறந்து வைத்தார் இதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. [சிவ]

அனைத்துகட்சி மாநாட்டில்

## கூட்டணி கலந்துகொள்வது முடிவுசெய்யப்படவில்லை

### சென்னையில் 'அமிர்'

சென்னை, ஜுலை. 10

இனப்பிரச்னைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் பொருட்டு ஜனுதிபதி ஜெயவர்த்தன முன்வைத்துள்ள ஆலோசனைகள் குறித்து நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு கொழும்பு செல்லவுள்ள ஆறுபேர் கொண்ட பிரதிநிதிக் குழுவின் பெயர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற்குழு (பொலிட்பீரோ) இன்று சென்னையில் அறிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்திரு மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம்

(5ம் பக்கம் பார்க்க)

## இருவிடயங்கள் குறித்து கூட்டணி ஜனுதிபதியுடன் விரிவாக ஆராயும்

கொழும்பு, வியாழன்

தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனுதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவுடன் இனப்பிரச்னை தீர்வு குறித்து நேரடி பேச்சுவார்த்தை நடத்தும் போது இரண்டு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயவுள்ளதாக அறிய வந்துள்ளது.

இச்சந்திப்பின்போது கவர்னருக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் குறித்து ஜனுதிபதியிடமிருந்து மேலதிக விளக்கங்களைக் கூட்டணி கோரவுள்ளது. அத்துடன் திருகோணமலை துறைமுகப்பகுதிமாகாண சபை ஆட்சிக்குள் வரையறுக்கப்பட வேண்டுமென்றும் வலி

(5ம் பக்கம் பார்க்க)

## "அரைகுறைத் தீர்வுகளை நாங்கள் ஏற்கமாட்டோம்"

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம். வெள்ளி,

''எங்கள் தோழர்கள் கல்லறைக்குச்செல்லவில்லை. கருவறைக்கு செல்கிருர்கள். எனவே மீண்டும் மீண்டும் அவர்கள் பிறப்பார்கள்'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரமுகர்களில் ஒருவரான திரு டேவிற்சன் பேசுகையில் கூறிஞர்.

கடந்த 7ம் திகதி கடலில் பலியான மேற்படி இயக்கப் போராளிகளின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறிஞர்.

''அரைகுறைத் தீர்வுகளை நாங்கள் ஏற்கமாட்டோம். எமது தாயகத்தை விடுதலை பெறவைப்பதன் மூலம் மறைந்த எம்தோழர்களுக்கு உண்மையான அஞ்சலியைச்செலுத்துவோம்'' ன்றும் கூறிஞர்.

(5ம் பக்கம் பார்க்க)

லஞ்சப் பிரிவினர் வேட்டையில்

## புலி வந்துவிட்டதென மக்கள் கிலி கொண்டு ஓட்டம்

கொழும்பு வியாழன்

பொலிஸ் அதிபர்களாக நடித்த இருவரை லஞ்ச ஆணையாளர் பிரிவு அதிகாரிகள் 'வாக்கிடோக்கிகளுடன் வாகனங்களில் வந்து நகரில் சுற்றி வளைத்து பிடித்த போது 'புலி' வந்து விட்டதென்று மக்கள் கிலி கொண்டு நடை பாதையிலிருந்து நடு வீதியால் ஓடியதில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிப்படைந்தது,

சுமார் எட்டு லட்சம் ரூபா

(5ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கணேசலிங்கம் சுருட்டு சுத்தமான புகையிலையினால் தயாரிக்கப்பட்டது. தேவையான வியாபாரிகள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: S T. கணேசலிங்கம், No.5, வளாக வீதி, திருநெல்வேலி. [C 3386]

யானை மார்க் வெற்றுச் சோடா போத்தல்களும், பெட்டிகளும், கொக்கோக்கோலா, பண்ரா வெற்றுப் போத்தல் கேசுகளும் உடன் விற்பனைக்குண்டு. 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C 3401]

கூந்தலழகு மிளிர நாலு இயற்கை பொருட்களான சியாக்காய், பச்சையரிசி, பயறு, வெந்தயம் சேர்ந்த ''சியாக்காய் பவுடர்'' மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M G M 777, K K S Road and 208 1 St Cross St, Jaffna. T P. 22611. [C 3399]

வீட்டுத்தளபாடங்கள் Show Case, கட்டில், அலுமாரி. கண்ணாடிமேசை Dressing Table தையல்மெஷின், Kenwood Chef, எவர்சில்வர், Pyrex ரீசெற். Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Sonyo Oven, Baby Cot, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, Main Street, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி.) C 3414]

பெரிய Singer Fridge (Kerosine) அழகானதும், சிறிது பழுதடைந்த நிலையில் மின் சக்திமூலம் பாவிக்க மாற்றியமைக்கலாம், (Villiers) நீர் இறைக்கும் இயந்திரம் [Mark - 12], Cassette Radio (J V . C) Guitar மோட்டர் சைக்கிள், Pannier Bags ஒருசோடிப்பக்கப் பெட்டிகள், பால் (Can) 5 கலன், Petromax மரம் அரியும் கைவாள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 62/1, கச்சேரி நல்லூர்றோட், யாழ்ப்பாணம். [C 3417]

## தேவை

நூடில்ஸ் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. அதற்குரிய உபகரணங்களும் இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளவும். 132, ஆடிய பாத வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில் [3357]

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. சம்பளம் 25/- - 30/- வரை தகைமைக்கேற்றவாறு கொடுக்கப்படும். ஆண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும். 18, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். [C 3356]

மருதடி எழும்பிள்ளையார் தேவஸ்தானத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கற்பூரத் தொழிற்சாலையில் கற்பூரம் அடிப்பதற்கு பெண்கள் தேவை. ஆண் விற்பனையாளர்களும் தேவை, முன் அனுபவம் உடையவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும், வேலைசெய்ய விரும்புபவர்கள் ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி காலை 10-00 மணிக்கு சுண்டிக்குளி றக்கா றோட்டில் இருக்கும் மருதடி ஆலயத்தில் நேரில் சமுகமளிக்கவும். [C 3355]

## தேவை

கண்டாவளை பணல் 100 கியூப், திருநெல்வேலி பல்கலைக்கழக மாணவர் நிலையக் Student Center] கட்டிட வேலைத்தளத்திற்கு உடன் தேவை. பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்: Lanka Builders [Student Center] மாணவர் நிலையம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். (C 3396)

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்கு கோழி தேவை. உயர்ந்தபட்ச விலையுடன் நேரில் வந்தும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T P. 23,31 [C 3418]

தெல்லிப்பழையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு இரவு நேரக் காவலாளி ஒருவர் தேவை. தெல்லிப்பழையிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் வசிப்பவராகவும், 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. 15-7-86க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும் டயானி எலெக்றிக்கல்ஸ். 222, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [C 3398]

நன்கு அனுபவமுள்ள சமையல் வேலை தெரிந்தவர்களும், வெயிற்றர் வேலை செய்யக் கூடியவர்களும் உடன் தேவை நேரில்வரவும். றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ் 370. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 3406]

## சேவை

மோட்டர், மின்விசிறி. மின் அடுப்பு, ரான்ஸ்போமர் கிறைண்டர், வாசிங்மெஷின் ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன திருத்த, றீவைண்டிங்செய்ய, வீட்டுவயறிங் செய்ய ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (ஈழநாட்டிற்கு எதிரில்) பழுதடைந்த மேற் குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும். [C 3390]

திருப்தியான சேவைகள் 'போட்டோஸ்ரட்'. பிரதிகள் ''றோனியோ'' பிரதிகள், ''தமிழ் - ஆங்கில ரைப்பிங்'' வேலைகள் யாவுக்கும், கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C 3367)

## வகுப்புகள்

Electronic Engineering English Medium - B Sc 1st year Level வயறிங், ரேடியோ, ரீவி (Antenna and Deck), வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், English Typing, புதிய வகுப்புக்கள் செய்முறைப் பயிற்சிகளுடன் 12-07-86 இல் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்), 328. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3359)

## உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன் அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் 21ம் திகதி தீர்த்தோற்சவத்துடனும் முடிவுறும்.

## தவறிவிட்டது

சுந்தரம் சிவஞான சுந்தரம் என்பவருடைய அடையாள அட்டை இல. 652952 56 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குலம்வீடியோ ஹோம், சாவகச்சேரி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும. (C 3380]

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்ற கைலாசபிள்ளை பெண் மகேஸ்வரி என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துகளின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

இல. ரி/281

கந்தசாமி கைலாச பிள்ளை, கோப்பாய் தெற்குதற்போது வதிவது சீமெந்து தொழிற்சாலை விடுதி காங்கேசன்துறை. மனுதார்,

எதிர்

கைலாசபிள்ளை பிரபாகரனின், கோப்பாய் தெற்கு தற்போது 5. வில்லா டி குலமா, 75018 பாரிஸ் பிரான்ஸ். எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிச் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1986ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி. இராமச்சந்திர ஐயர்
பதிவாளருக்காக,

மு யோகருமார்
மனுதாரின் சட்டத்தரணி.
C 3411

## வண்ணை காளியம்பாள் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி வண்ணை - கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாளின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்து தினங்கள் நடைபெறும்.

இருபதாந் திகதி ஞாயிறு தேர்த்திருவிழாவும். மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று 22ம் திகதி செவ்வாய் மாலை பூங்காவனத்துடன் மஹோற்சவம்நிறைவுபெறும்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி ஆலய வீதியைச் சேர்ந்த அபி. ஞானம்மா அல்லது ஞானதீபம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தமாகச்செய்யப்படும் விண்ணப்பம்:

மரணமெய்தியவர்.

ஜேம்ஸ் பாட்டன் கன்ற், ஆலயவீதி, சாவகச்சேரி.
மனுதார்.

வழக்கிலக்கம்:
மரணசாதன
நியாயாதிக்கம்:-222

எதிராக

1. கறோலின், கல்டா கன்றும்,
2. தோமஸ் போயேச் கன்றும் இருவரும் ஆலயவீதி, சாவகச்சேரி.

எதிர்வாதிகள்.

மேலே இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் உள்ள மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்வருமாறு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1986ம் ஆண்டு ஆனிமாதம் 24ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிட்ட எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள வேறெவரேனும் போதிய எதிர்காரணங்கள் காட்டினாலன்றி 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 6ந் திகதி பிரசித்த நொந்தாரிஸ் எஸ். கே. திரவியநாயகம் முன்பாக 2015ம் இலக்கத்தில் முடிந்ததும் இந்நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதுமான மேற்சொல்லிய மரணமெய்தியவரால் நிறைவேற்றப்பட்டதுமான மரணசாதனம் நிருபிக்கப்பட்டுள்ளதென்றும் அம்மரணசாதனத்தின் நிறைவேற்றுனர் மேற்சொல்லப்பட்ட மனுதாரென்றும் அவ்வாறன நிறைவேற்றுனர் என்றவகையில் குறித்த மரணசாதனத்தின் மீதான நிர்வாகத் தத்துவப் பத்திரங்கள் மனுதாருக்கு வழங்கப்படவேண்டுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகிறது

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 27ந் திகதி, 29-7-86க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

வரைதல்!
எஸ். கே. திரவியநாகம்,
மனுதாரின்
சட்டத்தரணி.
(C 3374)

## குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்றுமாலை நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்திலும், நாயன்மார்க்கட்டு வெயிலுக்கந்த விநாயகர் ஆலயத்திலும் மணிவாசகர் குருபூசை விழாவினை கொண்டாடுகின்றனர்.

## In Memoriam

ANTON
SUTHANTHIRAKUMAR
KANTHARATNAM

We lost you an year ago
Your loss to us can never be told.
Jesus grant you Eternal life.

A tribute from your wife, Child and loved ones.

[C 3279]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் வேலாயுதத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயமாக.

-இறந்தவர்;

வல்லிபுரம் வேலாயுதம் கைம்பெண் நாகேஸ்வரி; தும்பளை, பருத்தித்துறை.
—மனுதார்;

மரணசாதன நியாயதிக்கம் } இல. T/ 1245

எதிராக

1. வேலாயுதம் இரத்தினவேல்
2. வேலாயுதம் சண்முகவேல்
3. வேலாயுதம் சக்திவேல்
4. வேலாயுதம் மகள் நந்தினி
5. வேலாயுதம் சித்திரவேல்
6. வேலாயுதம் சிங்காரவேல்
7. சுப்பிரமணியம் வரதராசா

யாவரும் தும்பளை, - பருத்தித்துறை.
எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்றையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 1ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்;

1986ம் ஆண்டு ஆனி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சண்முகம் நடராசா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு!
பா. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3323)

யாழ். பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவினரின்

## "மண் சுமந்த மேனியர் -2''

மேடையேறத் தயாராகி உள்ளது.

உங்கள் ஊர்களிலும் மேடையேற்ற நீங்கள் விரும்பினால் யாழ். பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவைச் சந்தியுங்கள்.

கலாசாரக் குழு,
யாழ். பல்கலைக் கழகம், திருநெல்வேலி.
(C 3400)

## மத்தியதரைக் கடலில்
# கடற்படைகளை விலக்கிக்கொள்ள
# அமெரிக்கா - சோவியத் பேச்சு

மாஸ்கோ, ஜுலை-10 மத்தியதரைக் கடல் பகுதியிலிருந்து அமெரிக்க மற்றும் சோவியத் கடற்படைகளை விலக்கிக் கொள்வது குறித்து அமெரிக்காவுடன் சோவியத் யூனியன் பேச்சு நடத்தவுள்ளது.

சோவியத் வெளியுறவு மந்திரி ஐ நா. தலைமைச் செயருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இப்பேச்சுக்களை நடத்த சோவயத் யூனியன் முன்வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விண்வெளியின் அமைதிப் பயன்பாடுகளில் வேறுநாடுகளுக்கு உதவிபுரிய முன்வந்துள்ளதாகவும் சோவியத் யூனியன் அறிவித்துள்ளது

சோவியத் ராக்கெட்டுகள் வாயிலாக வெளிநாட்டுச் செயற்கைக் கோள்களைச் செலுத்தவும் அவற்றைப் பின்பற்றி வழிகாட்டவும் சோவியத் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. [து]

## கேரளாவில் மீண்டும் உண்ணாவிரதம்

பெங்களூர், ஜுலை-10 கேரள சட்டப் பேரவைக் கட்டிடத்தின் நுழைவாயிலில் சி பி ஐ. எம். துணைத் தலைவர் திருமதி கே. ஆர். கௌரி தலைமையில் ஐந்து எதிர்க்கட்சி எம் எல் ஏ க்கள் நேற்று கால வரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

அரசுக்கும் பல்கலைக்கழக ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டைச் செயற்படுத்தத் தவறியதை ஆட்சேபித்தே இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. [து]

## ‘லண்டன்முருகன்’ கும்பாபிஷேகம்

லண்டன் ஜுலை 11 லண்டன் முருகன்கோவிலில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று வருகிறது

இவ் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து பரமேஸ்வரக் குருக்களும், பூரணத் தியாகராஜாக் குருக்களும் இந்தியாவிலிருந்து சாம்பமூர்த்தி சிவாசாரியாரும் லண்டன் வந்துள்ளனர்.

# நெல்சன்மண்டேலா விரைவில் விடுதலை?

பொன், ஜுலை-10 சிறையிலிருக்கும் தென்னாபிரிக்கத் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்று மேற்கு ஜெர்மன் செய்திஏடான ‘வில்’ தெரிவித்துள்ளது.

இதேவேளை பிரிட்டனின் விளையாட்டுத்துறை பிரிட்டோரியா நிறவேற்றுமை அரசுடன் தொடர்புகொண்டிருப்பதனைக் காரணம்காட்டி இம் மாதப் பிற்பகுதியில் எடின்பராவில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய விளையாட்டுக்களை நைஜீரியாவும், கானாவும் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளன.

தென்னாபிரிக்காவிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிப்பதற்கு பிரிட்டன் தவறிவிட்டதை நைஜீரியா ஆட்சேபித்திருப்பதாக நைஜீரிய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். [து]

### உலகச் செய்திகள்

# “ஆயுதங்களைக் கைவிட்டால் மிசோரமுக்கு மாநில அந்தஸ்து’
## — ராஜீவ்

ஐசா, ஜுலை-10 ‘‘மிசோரமில் அமைதியை ஏற்படுத்தி அதன் வளர்ச்சிக்கு இயன்ற உதவிகள் அனைத்தும் செய்யப்படும்’’ என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று ஐசாவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் கையெழுத்தான மிசோரம் உடன்பாட்டைச் செயற்படுத்துவதற்கு எல்லா முயற்சியும் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதையடுத்து மிசோரம் புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளதென்றும், வன்முறையால் எதனையும் சாதிக்க முடியாது என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இனிமேல் வன்முறை நிகழக்கூடாது; அப்படி நடந்தால் அதை உறுதியாகச் சமாளிப்போம் என்றும் தெரிவித்த அவர், மிசோ தேசிய முன்னணியினர் ஆயுதங்களைக் களைவதுதான் முதலில் நிறைவேற்றவேண்டிய கடமையாகும். இது முடிந்துவிட்டால் மிசோரமுக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படுவதுகுறித்து ஆராயப்படுமென்றும் தெரிவித்தார். [து]

## படம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று மணிவாசகர் குருபூசை நன்னாளில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு நாவலர் திருவுருவப் படமொன்றை அன்பளிப்புச் செய்கின்றனர்.

## இலங்கை கடற்படை தொல்லை:
# இந்திய மீனவர் பாதுகாப்பு கோருகின்றனர்!

புதுடில்லி, ஜுலை-10 இலங்கைக் கடற்படையினரின் தொல்லையால் இந்திய மீனவர்கள் கடலில் சென்று நிம்மதியாக மீன் பிடிக்க முடியாத நிலை இருப்பதால் இந்தியக் காவற்படையினரின் விசேஷ பிரிவொன்றை இராமநாதபுரத்தில் நிறுத்தி இந்திய மீனவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றுமாறு இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி ராஜேஸ்வரன் இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு. குலாம் நபி ஆல்காத்தியைக் கேட்டுக் கொண்டார்.

திரு குலாம் நபி ஆல்காத், மற்றும் இந்திய உள்துறை இணையமைச்சுச் செயலர் திரு. சேமையா ஆகியோரை நேற்றுப் புதுடில்லியில் சந்தித்து இராமநாதபுர மாவட்டத்தில் இலங்கை அகதிகளின் அவலநிலைபற்றி விளக்கிக் கூறும்பொழுதே திரு வி ராஜேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். [து]

# அஹமதாபாத்தில் வன்முறை 10 பேர் பலி; பலர் காயம்

புதுடில்லி, ஜுலை-10 அஹமதாபாத்தில் நேற்று நடந்த வன்செயல்களில் பத்துப் பேர் இறந்தும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

சமய ஊர்வலமொன்று சென்றுகொண்டிருந்த பொழுது சிலர் ஊர்வலத்தின் மீது கற்களை வீசித தாக்கினர்கள். அத்துடன் பல கடைகள், கார்கள் தீவைத்து எரிக்கப்பட்டன.

குழப்பக்காரர்களைக் கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். இதனால் அப்பகுதி முழுவதும் பதற்றம் நிலவியது. நேற்று மாலை முழுவதும் இங்கு ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்தது. [து]


### உடனடியாகத் தேவை

பியர் வெற்றுப்போத்தல்கள் அல்லது ஸ்ரீ பாணி அடைக்கும் போத்தல்கள் உடனடியாகத் தேவை. ஆகக்கூடிய விலை கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு உடனடியாக

**பணிப்பாளர்,**
அருள் ஆச்சிரமம், 5. கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி:24081
என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

[A 782]



### பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

[A 787]



# பவர்ஸ் உரம்
வெல்ல முடியாதது

MASTEPS ABC 4/82 (D)

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6

ரூபா 2,000/-க்கும் மேல்

### மணிவாக்கு

ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்
கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந் தோம்
எய்யாமற் காப்பாய் எமை.

மாணிக்கவாசகர்.

## நமது நோக்கு

# கொழும்பு வரும் கூட்டணிக் குழு

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் குழுவொன்று சென்னையிலிருந்து வரும் நாளை சனிக்கிழமை கொழும்பு வரவிருக்கின்றது.

இனப்பிரச்னை தீர்வுக்கென இலங்கைஅரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளில் காணப்பட்ட சில முரண்பாடுகள் தொடர்பாக தமிழர் குழுக்கள் இந்திய அரசுமூலம் கேட்டிருந்தவிளக்கங்களில் திருப்தியடைந்ததின்பேரிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்டும் இலங்கை அரசுடன் நேரடியாகப்பேச்சுக்களை நடந்துவதற்கு ஒரு குழுவை அனுப்பமுடிவு செய்துள்ளது என்பது வெளிப்படை.

இதுவரையில் இந்திய அரசப் பிரமுகர்கள் இலங்கை அரசியலாருடன் நடத்தியுள்ள பேச்சுக்களின் விளைவாகவே இலங்கை அரசு ஏதோஒருவகையிலான தீர்வை இப்போது முன்வைத்துள்ளது இது ஏற்கனவே இருந்த நிலைமையைவிட ஓரளவு முன்னேற்றகரமானது எனஇந்திய அரசு கருதுவதால் இதனையே ஒரு அடித்தளமாக வைத்துக்கொண்டு தமிழர் குழுக்கள் இலங்கை அரசுடன பேச்சுவார்த்தைசளை நேரடியாகநடத்தி இன்னும் பலபடிகள் முன்னேற்றலாம் என இந்திய அரசு கருதுவதாகக் கொள்ளலாம்.

ஆனாலும் இளைஞர் இயக்கங்களைப் பொறுத்தவரை அவர்கள் நிலையிலிருந்து பார்க்கும் போது அரசின் இப்போதைய யோசனைகள் எந்த விதத்திலும் திருப்தியளிப்பதாய் இல்லை. எனவே இது தொடர்பான பேச்சுக்களில் அவர்கள் கலந்து கொள்வார்கள் (மறைமுகமாகவேனும்) என்று எதிர்பார்க்க முடியாது.

இருந்த போதிலும் இந்திய அரசின் ஆலோசனையின் பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக்குழு இங்கே நடத்தவிருக்கும் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் ஒருவேளை தமிழ் இளைஞர் குழுக்கள் பேச்சுக்களில் கலநது கொள்வது பற்றி ஆலோசிக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அந் நிலையை உருவாக்குவதற்கு இலங்கை அரசு இன்றைய தனது நிலையிலிருந்து பலமடங்கு விட்டுக் கொடுத்தாக வேண்டியிருக்கும்.

நாட்டில் அமைதியும் ஒருமைப்பாடும் ஏற்படுவதில் அரச தலைவர்களுக்கு இருக்கும் அக்கறையை அது எடுத்துக்காட்டும். அவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்கு எதிராகவிருக்கும் குறுகிய இன, சமய அரசியல் முட்டுக்கட்டைகளைச் சமாளிக்கவும் அரசு தயாராக வேண்டும்.

எனவே அப்படியான ஒரு சூழ்நிலை உருவாவதற்கு தமிழர் குழுக்களில் ஒரு பிரிவினரான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரச தலைவர்களுடன் நேரடியாகப் பேசுவது வரவேற்புக்குரியதே!

இப்போதைய மகாண சபை யோசனைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதல்ல இதன் கருத்து.

இதில் இன்னும் எவ்வளவு முன்னேற்றம் காணலாம். தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதற்கான வழிவகைகள் என்ன என்பதைக் கண்டறிவதே அடுப்படை. மாகாண அமைப்பின் மூலம் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர் அனுவிக்கக் கூடிய பங்கு பற்றி இந்திய அதிகாரிகள் அக்கறை கொண்டிருப்பது இயற்கையே. அதேவேளை வடக்குக் கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் இன, கலை, கலாசார ரீதியிலும் மொழி, மத வழிகளிலும் ஏற்கனவே இருந்துவரும் பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதற்கு வழிவகை காணப்பட வேண்டும்.

திட்டமிட்ட குடியேற்றங்களாலும், பலாத்கார நடவடிக்கைகளாலும் தமது பாரம்பரிய பிரதேசங்களில் சிறுபான்மையாக்கப்பட்டு விட்ட அல்லது அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்ட மக்களின் அரசியல் சமூக நிலைமைகள் பாதிக்கப்படாத வகையில் நிலைநாட்டப்படல் வேண்டும். இவை பற்றி ஆணித்தரமாகவும் விபரமாகவும் இந்திய அதிகாரிகளைவிட தமிழர்குழுக்களால்தான் விவாதிக்க முடியும்.

இதுவிடயமாக அண்மையில் மட்டக்களப்பு 2-வது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் சின்னலெப்பை காத்தான்குடியில் ஒரு கருத்தரங்கில் வெளியிட்டுள்ள சில தகவல்கள் சிந்தனைக்குரியவை. திருமலை மாவட்டத்தில் சமீபகாலமாக இடம்பெற்றுவரும் வன்செயல்களினால் அங்கு தமிழரின் பெரும்பான்மைகுறைந்திருப்பதாகவும் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையாகவிருந்த முஸ்லிம்கள் சிறுபான்மையாக சுருங்கும்நிலை யேற்பட்டிருப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

மாகாணசபைகள் திட்டம் இனப்பிரச்னைத் தீர்வுக்கு ஒரு வழிமுறை என்ற வகையில் ஆலோசிக்கப்படுமிடத்து மேலே சுட்டிக்காட்டிய அம்சங்களும் அவைபோன்றவையும் மிகுந்த அக்கறையுடன் ஆராயப்படவேண்டும்.

அந்தவகையில் இலங்கை அரசுடன்பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருத்தமே. பெறுபேறுகளை பொறுத்திருந்து பார்ப்போம்.

### கச்சாய் முதல் நாவற்குழி வரை

# ஏங்கி நிற்கும் மீனவரும் தூங்கிவழியும் கடற்பரப்பும்



கள ஆய்வு

● திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

தென்மராட்சியின் அழகே அழகு.

இந்த மண்ணில் பிறந்தவர்கள் பாக்கியவான்களே.

கொடிகாமச் சந்தியில் என்னைச் சுமந்து வந்த வாகனம் நிற்கின்றது. இப்பகுதியின் அழகுமிகு கடற்கரைக்குப் போகும் பாதையை வழிகாட்ட எவருமில்லையே என என்மனம் ஏங்குகின்றது

கொடிகாமம் மீன்சநதையினுள் நுழைந்தேன். சூடையும் சூவாரையுமே கண்களில் பட்டன. சுருங்கக் கூறின் விற்பதற்கு மீன்களும் இல்லை. வாங்குவதற்கு ஆட்களுமில்லை. கொடிகாமம் மீன் சந்தை வெறிச்சோடியிருந்தது

கொடிகாமத்தில் இருந்து கச்சாய் தெற்குநோக்கி மூன்று மைல் தூரம் பஸ் சேவை இலை. அதனல் தெற்கு நோக்கி எனது பாதயாத்திரை தொடர்ந்தது இரண்டு மைல்கள் நடந்திருப்பேன். அப்பால் ஒரு கோயில், அப்பால் ஒரு வெளியூடாகக்கடற்சரைக்குச் செல்கின்றேன். ஹவாய்தீவில் கப்டன்குக் சென்று இறங்கியபோது பென்குயின் பறவைகள் மாத்திரம் வரவேற்றன. இந்த வெளியில் எவரையுமே காணேம்!

கடற்கரையிலிருந்து ஒருமீனவர் என்னை நோக்கிவருகிறார். எனது நோக்கத்தைச் சொன்னேன். இதோ அவர்இங்குள்ள மக்கள்படும் கஷ்டங்களை எனக்குச் சொன்ன விதத்தில் தருகின்றேன்.

கடல்வலயச் சட்டம் மற்றைய பகுதிகள் போன்று கச்சாய் தொடங்கி நாவற்குழி வரைபல இடங்களைப் பாதித்துள்ளது கச்சாயில் மீன் பிடிக்கும் தொழிலாளர்குடும்பங்கள் 150 இருக்கின்றன. வட கடலில் பீரங்கிப்படகுகள் மீனவரை வேட்டையாடுகின்றன. இங்கு அப்படகுகள் இல்லாதுவிடினும் எம்மை எப்பொழுதும் 'ஹெலி' கண்காணிக்கின்றது.

கடல்வலயச் சட்டத்தின் நோக்கம் என்னவாகஇருக்கும் என்று எனதுகேள்வி தொடருகின்றது.

சொன்னார்:

''அன்ன்...... மாயி என்ற தீவில் கப்டன் மாகிஎன்பவர் ஒரு பூந்தோட்டம் வைத்திருந்தார். அவர்கடலுக்குள் இருந்த தீவுஒன்றுக்குள்இருந்த அழகான பாமாகினி என்ற பூஞ்செடியின் விதையை எடுத்து வந்திருந்தார். பாமாகினியின் விதைகளோ இலநதவில் ஊரெல்லாம் பரவக்கூடியது. அந்தப் பூஞ்செடி அந்த ஊரில்உள்ள யூலிஎன்ற ஒதுக்கப்பட்டகாட்டையே அழித்துவிட்டது. அதுபோல் கடல்வலயச்சட்டம் தமிழ்மக்களிடையே வறுமை விதைகளை விதைத்தது இச்சட்டம் மூலம் எமது நியாயமான தமிழ் உயிர்களை அழிக்க நினைக்கிறது.''

கடற்கரையைச் சுற்றிக் காட்டிய அந்தவாலிபர் என்னைக் கொடிகாமம்வரை அழைத்து வந்தார். கடற்தொழிலை இழந்த சிலகுடும்பங்கள் தென்

(5ம் பக்கம் பார்க்க)

✶ இன்று மணிவாசகர் குருபூசை

# மணிவாசகரெனும் சிவஞானி

● அருளாளன்

மணிவாசகப்பெருமானின் பெருமைகளை அறிந்திருக்க வேண்டியதும் மணிவாசகர்மீது அன்புகொண்டு அவரை நன்றியுணர்வுடன் நினைந்து வழிபட வேண்டியதும் சைவத்தமிழ் மக்களாகிய நமது கடமைகளுள் ஒன்றுகும்

நாமெல்லாம் சிவபக்தியும் சிவஞானமும் பெற்று உய்யத்தக்க அரிய நூல்களான திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களையும் அருளிய பெருங்குரவர் மணிவாசகர். இந்த அருள் நூல்களை நாமெல்லாம் ஓதியும் சிந்தித்தும் நன்மையடையவேண்டுமென்பதற்காக தில்லையெம்கூத்தப்பிரானே தமது திருக்கையால் எழுதிச் சிதம்பரத்தில் வெளிப்படுத்தியருளினார்

நமது குழந்தைப்பருவத்தில் நன்மை தீமைகளை மட்டுமன்றி நமக்குத் தேவையான உணவை எடுத்து உண்ணத் தெரியாமலும் பிராணிகளால் வரக்கூடிய துன்பங்களையும் உணவு. உறக்கம் முதலிய தேவைகளையும் அறிந்தும் நிறைவேற்றத் தெரியாத குழந்தைப் பருவத்தில் எம் தாயார் பசிக்குப் பால்நினைந்து ஊட்டியும் உறக்கத்துக்கு தாலாட்டுப் பாடியும் நம்மைக் கவனித்த அன்புடைமையிலும் பார்க்கப் பல கோடி மடங்கு நமக்கு அன்பு செய்யும் சிவபெருமானின் இயல்பையும் ஆணவமாகிய தீக்குணத்தில் அகப்பட்டுச் சிவனருளைப் புறக்கணித்துத் துன்புற்றும், இறைவனை நிந்தித்தும் வாழும் நம் சிறுமைகளையும் தமது திருநெறிய தெய்வத் தமிழ்ப்பாக்கள் மூலம் உணர்த்தி நம்மை உருக்கச் செய்யும் திருவாசகத்தைப் பாடிய மணிவாசகரின் பெருமையை ஒவ்வொரு திருவாசகப் பாடலும் நன்கு உணர்த்துகின்றன

அழுதடி அடைந்த அன்பர் என்று போற்றத்தக்கவகையில் சிவபெருமானின் அருளுக்காக — நாம் பொன்னையும் பொருளையும் புகழையும் நினைந்து ஏங்கி உருகுவது போல ஏங்கி உருகி அழுத மணிவாசகப்பெருமான் நாமும் சிவனருளுக்காக அழுது தொழ வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்.

சிவனருள் ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டு தொழுதும், உருகியும் துதித்தும் யாத்திரை செய்தும் வாழ்ந்த அருளாளராகிய மணிகாசகப் பெருமான் சிதம்பரத்தில் நிகழ்த்திய அரிய அற்புதம் ஒன்றையும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்

மணிவாசகப் பெருமான் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில் இலங்கையரசன் சபையிலிருந்த புத்தகுரு சிதம்பர மகிமையைக் கேள்வியுற்றுதான் சிதம்பரத்தையடைந்து புத்த சமயமே மேலானது என்பதை நிலைநாட்டச் சிதம்பரத்திலுள்ள சிவாலயத்தைக் புத்தருக்குரிய ஆலயமாக்குவதாகச் சபதம் செய்து இலங்கையரசனுடன் சிதம்பரம் சென்றான். அப்படிச் சென்ற புத்தகுருவை வாதத்தில் வென்று சைவ சமயமே நல்ல சமயம் என்று அப்புத்த குருவுக்கும் இலங்கை அரசனுக்கும் மணிவாசகப் பெருமான் உணர்த்தியருளினார் என்பது வரலாறுகும். இலங்கையரசனுக்குச் சைவத்தின் மேன்மையை உணர்த்தும் வகையில் ஊமையாயிருந்த இலங்கையரசகுமாரியின் ஊமைத்தன்மையைச் சிவனருளின் துணையால் நீக்கிய அற்புதத்தையும் மணிவாசகர் நிகழ்த்தியருளினார்.

சிவனருளைப்பெற அழுது துதித்தது மட்டுமன்றி சைவ சமயமே நல்ல சமயமென்று நிலை நாட்டியது மட்டுமன்றி திருவெம்பாவை திருப்பொற்சுண்ணம் ஆகிய ஒவ்வொரு சைவசமயிக்கும் அவ்வப்போது பயன்படத்தக்க அருட்பதிகங்களை அருளிய பெருமை குறித்தும் மணிவாசகப் பெருமான் மீது மாறாத பக்தி கொண்டு வழிபடவேண்டியது அவசியம்.

# ஏங்கி நிற்கும் மீனவரும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளேலே பின்னி வாழ்ந்துவரும் சிலதோட்டங்களேயும் அவர் சுட்டிக்காட்டினுர்.

## இடப்பெயரும் கேரதீவு மீனவர்

கேரதீவு மன்ஞருக்குப் போகும் பி யாணிகளின் குறுகிய திறவுகோலே. அங்கே பல மீன்பிடிக் கிராமங்கள் இருக்கின்றன.

அப்பால் பூநகரி ராணுவ முகாம் சந்தோஷமாக மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் கலங்கி நின்றனர். இரு விமானங்கள் கடல் பிராந்தியத்தில் வட்டமிட்டதே இதற்குக் காரணம்.

விமான நோட்டம் அதிகம் இருப்பதால் பெரும் வள்ளம் வைத்துத் தொழில்செய்தோர் எல்லாம் நாச்சிக்குடாவுக்கு அப்பால் எங்கெல்லாமோ நகர்ந்து விட்டனர்.

அன்ருடம் உழைக்கும் மீனவரே கடற்கரையில் இன்றும் தொழில் செய்கின்றனர்.

''இராணுவம் மனம் வைத்தால் தான் எமக்கு வாழ்வு'' என்ருர் கடற்கரையில் நின்ற மீனவர் ஒருவர்.

நாச்சிகுடாப் படுகொலேகளே நினைவுகூர்ந்த அவர் கடல் வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கு இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இம் மக்களே நினைத்தபோது மனத்தில் பெரும்பாரம் அழுத்தியது.

## நாவற்குழியில்

எங்கெல்லாம் மீனவர்கள் இருக்கின்ருர்களோ அங்கெல்லாம் இராணுவ முகாம்களும் பக்கத்தே இருக்கின்றன.

நாவற்குழிக் கடலே தூர நின்று நோக்கினும் இராணுவ மூகாமைக் காவல் செய்வதற்காக கடலுக்கு உள்ளேயே கம்பிக் கட்டைகள் நடப்பட்டிருக்கின்றன. பல்லயிரக்கணக்கான இருத்தல் இருல்களும், மீன்களும பிடிக்கப்பட்ட நாவற்குழிக் கடல் பரப்பு ஆள் அரவமின்றி அடங்கிக் கிடக்கின்றது.

அங்கு மீன்பிடிவேலே செய்த மீனவர் ஒருவரைக் கைதடியில் சந்தித்தேன். அவர் சொன்னதைக்கேட்டு மனமே துணுக்குற்றது.

''நாவற்குழி முகாமில் இருந்து அடிக்கும் ஷெல் கடலில் எந்நேரமும் விழும். முகாமிலிருந்து குடிமனேக்குள் வர இராணுவம் வெளிக்கிடும்போது போராளிகள் எதிர்த்தால் திரும்பிவரும் ராணுவம் கடலில் மீன்பிடிப்போரையே சுட்டு வீழ்த்தும்.'

கச்சாய், கேரதீவு, நாவற்குழி இம்மூன்று இடங்களும் கடல்வலயச் சட்டத்தால் ஒரு முக்கோண வறுமைப்பொறியில் சிக்கியுள்ளது எனலாம்.

## பளேக்கு....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரின் அனுமதி பெறுவது என்ற நடைமுறை நியதி நிறுத்தப்பட்டு முன்புபோல போகலாமென்ற நடைமுறை வருமட்டும் வாகனங்கள் கொழும்பு போகாது தடை செய்யும் போராட்டம் தொடரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வாகனங்கள் கொழும்புக்குச் செல்வதுதடை செய்யப்படுவதால் யாழ்ப்பாணப் பகுதிகளில் பொருட்களின் விலேகள் அதிகரிப்பதைத் தடுக்க முயற்சிப்பதெனவும் இதுதொடர்பாக வர்த்தகர்களுடன் பேசிக்கொள்வதெனவும் சபையில் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கான லொறிச் சொந்தக்காரர்கள் கலந்து கொண்டனர். [ஐ]

## கொடியேற்றம்

சுழிபுரம், வியாழன்.

வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது இம்மாதம இருபதாம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறும்.

அர்ச்சுனவின்

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

12-07-1986



சதாசிவம் சுமிழசுவரன்
(அர்ச்சுன - குட்டியா)

தமிம் மண்ணில்:
04-04-1960

வீரசொர்க்கத்தில்
12-06-1986

பணிவன்புடன் அழைக்கும்

தந்தை, தாய், சகோதரங்கள்.

46, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

C-3416

## நன்கொடை ஸ்தாபனமாக அங்கீகரிப்பு

யாழ்ப்பாணம். வெள்ளி, மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் நிதி திட்டமிடல் அமைச்சினுல் நன்கொடை ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலேயேமுதன்முதலாக நன்கொடை ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்டது மேற்படி சங்கமே என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டணி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும், திருமலே முன்னுள் எம் பி, திரு. சம்பந்தன், யாழ்ப்பாண முன்னுள் எம் பி. திரு. யோகேஸ்வரன், கிளிநொச்சி முன்னுள் எம். பி. திரு. ஆனந்தசங்கரி மூதூர் முன்னுள் எம். பி. திரு. தங்கத்துரை ஆகிய ஆறு பேருடன் இலங்கையிலுள்ள சில முக்கிய பிரமுகர்களும் இக்குழுவில் இடம் பெறவுள்ளனர்

இதேவேளே எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனேத்துக்கட்சிகளின் மாநாட்டில் தமிழர் விடுதலேக் கூட்டணி பங்குகொள்வது குறித்து கூட்டணியின் அரசியற்குழு (பொலிட்பீரோ) முடிவுசெய்யவில்லே என்று திரு அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். [பி]

## பின்னுறுதிக்கட்டளே பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல: T/279

இளவாலேவடக்கு சின்னத்தம்பி சீவரத்தினம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில். சீவரத்தினம் விஜயசிங்கம் -மனுதார்.

மரணமெயதியவர்

1 அருளானந்தம் கைம்பெண் சாரதாமணிதேவி
2. முருகையா தேவதாசனும பெண்
3 இந்திரவும் - எல்லோரும் இளவாலே

—எதிர்மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களே நிர்வகிப்பதற்காக மேற்படிநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளே பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு யூலே மாதம் 16-ம் திகதி முற்பக 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இந்நீதிமன்றத்தின் முன்னர் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளே ஏன் முற்ருன கட்டளேயாக்கப்படலாகாது என்பதற்கு ஏதும் எதிர்க்காரணம் இருப்பின் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்கள்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 16ம் திகதி.

நீதிமன்றக்கட்டளேப்படி,

வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளர்.

தயாரித்தது:
க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3420)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி சித்தன்கேணி சிவன் கோவிலில், இன்று பிற்பகல் 5-30 மணி தொடக்கம், ''அடியார் நடுவுள்'' என்னும் பொருள் பற்றி, பலாலி ஆசிரியர் கலாசாலே ஆங்கில விரிவுரையாளர் திரு. க கபிலாயநாதன் சொற்பொழிவு ஆற்றுவார். தொடர்ந்து சிவ வழிபாடும், சப்பரத் திருவுலாவும் நிகழும்.

## அரைகுறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி சடலங்கள் விடுதலேப்படையின் மரியாதையுடன் யாழ். நகரிலிருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

மறைந்த போராளிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் யாழ். குடாநாடெங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகள் நெடுகிலும், வாழை, கமுகு, தென்னே மரங்களும் கட்டப்பட்டிருந்தன. கடைகள் யாவும் நேற்றுப் பிற்பகல் மூன்றுமணியுடன் மூடப்பட்டன. போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டன.

மானிப்பாய் பிப்பிலி மயாணத்தில் நேற்று இடம்பெற்ற இறுதிச்சடங்கில சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். 32 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதின் பின்பு மக்கள் விடுதலேப்படையின் பிரதமதளபதி தேவானந்தா சிதைகளுக்கு தீமூட்டினுர்.

தமிழீழ மக்கள் விடுதலேக் கழக உறுப்பினர்களும் தமது அஞ்சலியை செலுத்தினர்,

மரணமான ஏழுபேரில் ஒருவரான சுகிர்தனின் (பரமநாதன் கல்வியங்காடு) சடலம் நேற்றுமுன் தினம் மானிப்பாய் பிப்பிலி மயானத்துல் தகனம் செய்யப்பட்டது.

## இடம் பெயர்ந்த மாணவர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணம் வெள்ளி

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள (க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு தமது மாவட்டங்களுக்குச் செல்வதற்குப் பிரச்னேயை எதிர்நோக்கும் மாணவர்கள், இடம் பெயர்ந்த மாணவர்கள் அமைப்புத் தலேவர் அல்லது செயலாளரை தினசரி மாலே 4 30 மணியளவில் யாழ் இந்து விடுதியில் சந்திக்கலாம் என்று இடம் பெயர்ந்த மாணவா அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி மாணவர்களின் பிரச்னேகள் குறித்து தலேவர், செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. டீ சியாம், திரு ஆர். பகீரதன் ஆகியோர் யாழ். கல்விப் பணிப்பாளரை சந்தித்து மாணவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றித் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளேயாட்டு அவையின் விருதுகள் விழா

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ். பல்கலேக்கழக விளேயாட்டு அவை அதனது 10வது ஆண்டு நிறைவினே யொட்டி நாளே சனிக்கிழமை யாழ்.பல்கலேக்கழக கைலாசபதி கலேயரங்கில் 'விருதுகள் விழா' ஒன்றினே நடத்த உள்ளது

யாழ்ப்பாண அரசினர் பொதுவைத்தியசாலே அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கெ. எஸ். நச்சினுர்க்கினியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் உதைபந்தாட்டம், கிரிக்கெட், பூபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகியவற்றில் சிறப்புத்தகுதி பெற்ருேருக்கு விருதுகளவழங்கப்படும் [வசா-நி]

## நீர்வேலியில் பொதுச் சந்தை

யாழ்ப்பாணம், வெள்ளி நீர்வேலியில் உப-தபாற் கந்தோருக்கு அருகாமையில் பொதுச்சந்தை ஒன்று ஆரம்பிக்கபபட்டுள்ளது

## கந்தளாய்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காவல்படையினரும் தமிழர்கள் வசிக்கும் வீடுகளுக்குள் திடீர் திடீரெனப் புகுந்து அங்கிருந்தவர்களே நோக்கி துப்பாக்கிகளால் சுட்டார்சள்.

பலியானேர் விபரம் வருமாறு-

மங்கிளிப்பிள்ளே (65 வயது) பேச்சிமுத்து (35 வயது) விநேசம் (30 வயது), வி அருளம்பலம் (30 வயது), திருமதி மகேஸ்வரி (28 வயது). க. யோகேஸ்வரி 25 வயது), க, இராசகரன் (35 வயது).பொ. இரத்தினம்மா (45 வயது), சாந்தி (18 வயது). பாக்கியம் (22 வயது), குழந்தை (40 வயது), (சரவணே 42 வயது),

காயமடைந்தோர் விபரம் வருமாறு:

மமாங்கம் (29 வயது). நாகேஸ்வரி(22வயது),மனேன் மணி (21 வயது). க. பேபி 23 வயது). க. மங்களேஸ்வரி (24 வயது)' ப. தேவி (25 வயது), ச. பார்வதிப்பிள்ளே (45 வயது), மாணிக்கம் (32 வயது) [மா]

## இருவிடயங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுறுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் ஆலோசனேத் திட்டங்களின்படி மாகாணசபைத் திட்டங்களில் திருமலேததுறை முகப்பகுதி அடங்காதென் றும், அது விசேஷ அதிகார சபையினுல் நிர்வகிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது தெரிந்ததே.

தமிழர் விடுதலேக் கூட்டணியினர் ஜனதிபதியுடனுன நேரடிப் பேச்சுக்களே நடத்தியபின்னர் தமிழ்ப் பகுதிகளுக்கான தமது விஜயத்தையும் மேற்கொள்ளவுள்ளனராம். [ய-ரி]

## லஞ்சப்,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை பெற்ற பின் வாலிபர்களே வெளநாட்டுக்கு அனுப்பாமலும் பணத்தை திருப்பிக் கொடுக்காமலும் காலம் கடத்தி வந்த 4 வெளிநாட்டு வேலே வாய்ப்பு முகவர்களிடமிருந்து பணத்தை திருப்பிப் பெற யாழ் மயூரா என்றப்பிரைஸஸ் திரு. மகேந்திரன், பொலிஸ் அதிபர் இருவரின் உதவியை நாடினுர்.

இந்த உதவிலய செய்வதற்கு அவ்விருவரும் சன்மானம் பெற்றதாகவும் மேலும் ஒரு தொகையை திரு. மகேந்திரனிடமிருந்து கேட்டதாகவும் இதில் ஒருபகுதியை அவர் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது

இதே சமயம் அவ்விருவரும் அடையாள அட்டையுடன் வெற்றுப் பேப்பருடன் கையொப்பமிடுமாறு திரு. மகேந்திரனிடம் வற்புறுத்தியபோது, அவருக்கு சந்தேகம் தோன்றவே இது பற்றிலஞ்ச ஆணேக்குழுவின கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

14 தினங்களாக திட்டமிடப்பட்டு கடந்த 8ம்தேதி மாலே 4 மணியளவில், ஏரிக்கரை அலுவலகம் முன்பாக, இரு பொலிஸ் அதிகாரிகளும் திரு மகேந்திரனிடம் மிகுதி சன்மான தொகையை பெறும்போது லஞ்ச ஆணேக்குழுவை சேர்ந்த சுமார் 15 அதிகாரிகளபல் சுற்றி வளேக்கப்பட்டு பிடிபட்டனர். அப்போதே புலி' வந்து விட்டதாக பெரும் பதற்றம் ஏற்பட்டு மக்கள் சிதறி ஓடினுர்கள். விசாரணேயின்போது தென்னிலங்கையை சேர்ந்த இரு சகோதரர்களே, பொலிஸ் அதிபர்களாக நடித்தது தெரிய வந்துள்ளது. (மா)

## கடைசிநேர வரிவிளம்பரம்


### தேவை

இந்துமகளிர் (Hindu Ladies) கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்க: வீடியோ பிரசாத், 424, K. K. S. வீதி, கின்னர் கட்டிடம் அருகாமையல), யாழ்ப்பாணம். (A 925)

### விற்பனைக்கு

மிக நல்ல நிலேயில் C 90 CB 90 - இண்டு மோட்டார் சைக்கிள்கள் விற்பனேக்குண்டு. 622, மானிப்பாய் வீதி, (2ம் கட்டை), ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [C 3424)

லிடோ
காலே 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா நடித்த
மௌனகீதங்கள்
(கலர் - புதிய பிரதி)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
VENOM
Action - Thrill

## பென்சன் திகதிகள்

யாழ்ப்பாண, வெள்ளி

யாழ் தபால் நிலையம் ஊடாக பென்சன் எடுப்பவர்களுக்குப் பின்வரும் திகதிகளில் துரையப்பா விளையாட்டரங்கில் பென்சன் கொடுபனவுகள் வழங்கப்படும்.

ஜூலை 2? ம் தேதி: கொக்குவில் மானிப்பாய், வேலணை, வண்ணார்பண்ணை.

23 ம் திகதி: வல்வெட்டித்துறை, தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை வயாவிளான்

24 ம் திகதி: யாழ்ப்பாணப் கைதடி.

25 ம் திகதி: கரவெட்டி காங்கேசன் துறை, அளவெட்டி, சுன்னாகம்.

28 ம் திகதி: நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு.

29 ம் திகதி: கோப்பாய், காரைநகர், பருத்தித்துறை, கொடிகாமம்.

30 ம் திகதி: யாழ்ப்பாண அச்சுவேலி, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை.

31 ம் திகதி; சாவகச்சேரி பண்டத்தரிப்பு, உரும்பிராய், சங்கானை.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாண, வெள்ளி

யாழ் வண்ணார்பண்ணை அருள் மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி ஆலய [பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்] மகா கும்பாபிஷேகம் 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## இன்று நல்லை ஆதீனத்தில் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்குப் பூசையுடன் ஆரம்பமாகும் குருபூசை நிகழ்ச்சிகளில் விரிவுரை புராண படலமும் கலந்துரையாடல், திருவாசக இன்னிசை என்பவற்றைந் தொடர்ந்து மாலை மாணிக்கவாசக சுவாமிகள் திருவீதியுலாவும் நிகழும். [ப]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

சுழிபுரம் பகுதி சுகாதார அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகக் தலைவர் திரு. அ அருணசலம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும். (ஐ)

## இன்று

யாழ்ப்பாணம் வியாழன்

உடுவில் கிழக்கு கற்பக விநாயசர் ஆலய மகோற்சவ விழா இன்று 11 ம் திகதி ஆரம்பமாகின்றது. 20 ம் திகதி இரதோற்சவமும் 21 ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உடு. நிரு.)

## இன்றைய பலன்

மாதம்: ஆனி

திகதி: 27 [1986-7-11] வெள்ளி

நக்ஷத்திரம் - மகம் பி. ப. வரை

திதி: சதுர்த்தி பி. ப, வரை

மேடம்: புண்ணிய யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம். பெரியோர் ஆதரவு கட்டாயம் கிடைக்கும் பிதாவழிப் பெருமையுமுண்டு.

இடபம். உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும் நிலைமாற்றமும் ஏற்படலாம். பழகலையும் பலரும்.

மிதுனம்: செல்வாக்குப் பெருகும். வரவில் உயர்வு தென்படும். பிறபொருள் வரவுமுண்டு. தெய்வத்தின் அருளுய கடைக்கும்

கடகம்: உறவுகளில் பிளவு தென்படும். தொழில் மந்த நிலை காணும். வீண் பழிக்கும் ஆளாவீர்கள். கவனம் வேண்டும்.

சிங்கம்: கொடுக்கல் வாங்கல் பிணக்கு உருவாகும உதவி செய்யப்போய் பகைமைச் சம்பாதிப்பீர்கள். அரச பயமுமுண்டு.

கன்னி: நுக்கடனே காரியத்தைச் சாதிப்பீர்கள். வெளியூர் செய்தியொன்று மகிழ்ச்சியைத் தரும் குடும்பத்திலும் குதூகலம் தென்படும்

துலாம்: எதிலும் அவசரக் கோபம தென்படும். சகோதர வழிச் சஞ்சலமேற்படும் தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருச்சிகம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர் சகாயம் கல்வித் துறையில் அதிக ஈடுபாடும் ஏற்படும்.

தனுசு: இனிமை பயக்கும் தினம். இன்று அன்பர்கள் ஆதரவு கிடைக்கும். பொது மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். உற்சாகம் பிறக்கும்.

மகரம்: சூழ்ச்சி வலை விரிக்கும் வழக்கு விவகாரமேற்படும் வீண் செலவுமுண்டு. தெய்வ நம்பிக்கையே நன்று

கும்பம்: நிதியில் முடக்கமேற்படும் சிலர் வீண் பழிக்கும் இலக்காகுவர். விஷமிகள் தொல்லை புதிய உருவையெடுக்கும், பயிர் செய்கையில் பாதிப்பும் ஏற்படும்

மீனம்: கடன் தொல்லை அதிகரிக்கும். குடும்பப் பிரிவுகளேற்படும் மனததளர்ச்சி ஏற்படும் நிதானம் வேண்டும்,

திருமலை ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்
### டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜூலை 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத் ★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**

125 (455), ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 774)



## வீடியோ படத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகைகள் உடனடியாகத் தேவை

விரைவில் தயாரிக்க இருக்கும் வீடியோ படத்தில் நடிப்பதற்கு ஆற்றல் மிக்க நடிக, நடிகைகள் உடன் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

நேரம் 9-30 முதல் 12-00 மணிவரை

**மேஜர்ஷண்**

மணிக்குரல் விளம்பர சேவை

பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(A-781)



## உடனடி பிரயாண ஒழுங்குகள்
### விசேஷ சேவை

சவுதி அரேபியா

கிளீனேர்ஸ்:-

வைத்தியசாலை, விமான நிலையம், மத்திய தொலைபேசித் திணைக்களம்.

20 நாட்களுக்குள் பிரயாணம் செய்யக்கூடிய ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேர்சல் ஏஜென்சீஸ்**

இல. 125 (455), ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் முன்பாக - ஆயுர்வேதக் கல்லூரி அருகாமையில்)

(A 776)



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடனடியாக எம் முகவர் உங்களைக் கூட்டிச் செல்வார்.

காரியாலயத்தில் உடனடியாக தொடர்பு கொள் கொள்ளுங்கள்.

★ சவுதி அரேபியா ★ மத்தியகிழக்கு நாடுகளில் வருமான ஒழுங்கு ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு

பாஸ்போட், பொன்ட் கூடிய கெதியில் குறைந்த செலவில் செய்து தரப்படும்:

**GROUP ATLANTIC**

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(அடைக்கலமாதா கோயில் முன்பாக)

(A 779)



## போட்டிப் பரீட்சை முடிவுகள்

வடமாநில திறன் ஆய்வு நிலையம் நடாத்திய போட்டிப்பரீட்சை முடிவுகள் 11-07-86 வெள்ளிக்கிழமை பங்குபற்றிய ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சை முடிவுகள் அனைத்தும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றன. பரிசில்கள் பெறும் மாணவர்களின் பெயர்கள் 15-07-86 ஈழநாட்டுப் பத்திரிகையில் வெளிவரும். ஒவ்வொரு பாடங்களிலும் அதிக புள்ளிகள் பெற்ற 7 மாணவர்களின் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவரும். பரிசில்கள் பெறும் மாணவர்கட்கான பரிசில்கள் அடுத்தமாதம் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். பரிசளிப்பு விழா சம்பந்தமான அழைப்பிதழ்கள் பத்திரிகைகள் மூலமாகவும். கல்விநிலையங்கள் மூலமாகவும் அறிவிக்கப்படும். அத்துடன் பின்வரும் திகதிகளில் கீழ்வரும் கல்விநிலையங்களில் ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய வினாத்தாள்களுக்கு உரிய விடைகளும் விடைகளுக்கான புள்ளியிடும் முறையும் பற்றி இலவச கருத்தரங்கு நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 11-07-86 | வெள்ளி | 1 30க்கு | பௌதீகம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 12-07-86 | சனி | 1.30 | பிரயோக கணிதம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 13-07-86 | ஞாயிறு | 1.30 | தூய கணிதம் | I-II சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். |
| 14-07-86 | திங்கள் | 1.30 | இரசாயனம் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |
| 15-07-86 | செவ். | 1.30 | விலங்கியல் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |
| 16-07-86 | புதன் | 1.30 | தாவரவியல் | நியூ மாஸ்டர் இன்சிற்றியூட், யாழ்ப்பாணம். |

[A 786]



## சற்றுப் பொறுங்கள்

எசன்ஸ் வகைகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றது!

ஆம்! இது வைத்தியர்களின் அத்தாட்சி!

ஆகவே சுத்தமான, சுகாதாரமான, பழரச பானங்களைப் பருகி உங்கள் உடல் நலத்தை இவ் விளவேனிற் காலத்தில் பாதுகாத்துக்கொள்ளுங்கள், அவ்வரிசையில் அமைவதுதான் தோலகட்டி தயாரிப்புகள். தோலகட்டி நெல்லிரசம், சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. கடந்த 65 வருடகாலமாக மக்கள் மனதில் நிலைத்த பெயர் - மறந்து விடாதீர்கள்! தோலகட்டி நெல்லிரசம் தாராளமாக கிடைக்கின்றது.

ஏகப் பிரதிநிதிகள்!

| | |
|---|---|
| செபமாலை தாசர்சபை, தோலகட்டி, வயாவிளான், | ஜோ. எகட்டன், செனத் மார்க்கட்டிங், யாழ்நகர். |

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணி மிசன் விற்பனை நிலையம்,**

145, நவீன சந்தை, யாழ்நகர்.

[A 780]

# யாழ். உதைபந்தாட்ட லீக் "பாடும்மீன்" கழகத்துக்கு தற்காலிக தடை விதித்தது!

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநகர் 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகத்துக்கு, உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளாதபடி, 'யாழ் உதைபந்தாட்ட லீக்' தற்காலிக தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அண்மையில், நாவாந்துறையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் சம்பந்தமாகவே, மேற்படிக் கழகத்துக்கு இந்த தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் கடந்த மாத நிர்வாக சபைக் கூட்டம், தலைவர் டாக்டர் ஜே பி. ஸி பிலிப் தலைமையில் நடைபெற்ற போது, சபையின் ஏகோபித்த முடிவின்படி இந்த தற்காலிக தடை உத்தரவு விதிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது

இக் கூட்டத்தின் ஆரம்பத்தில், மேற்படி லீக்கின் காரியதரிசிக்கும், சில உறுப்பினர்களுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதினால் காரியதரிசி தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு சபையைவிட்டு வெளியேறியதாவும் தெரியவருகின்றது.

இக்கூட்டத்தின் முடிவில் 'காரியதரிசியின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளவதில்லையென்றும், அடுத்த நிர்வாகசபைக் கூட்டத்தில், காரியதரிசியை அழைத்து, அவரின் ராஜினாமாவுக்கு விளக்கம் கோருவதென்றும், அதுவரை லீக்கின் நிர்வாகப் பொறுப்புக்களை, தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் தலைமையில், உதவிக் காரியதரிசி திரு எம். தேவதாஸ் கவனித்து வரவேண்டும்' எனவும், நிர்வாகசபை ஏகமனதாக முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (வி)

## தே. ஆ. தராதர வாய்மொழிப் பரீட்சை


கொழும்பு, வியா.

தேசிய ஆங்கில தராதரப் பரீட்சைக் குரிய வாய்மொழி மூலப் பரீட்சை இவ்வார இறுதியில் கண்டி, கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு 3000 க்கும் அதிகமானோர் தோற்றவுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் முதல் முறையாக நடைபெற்ற இப்பரீட்சைக்கு 19,000 ஆண் பெண் பரீட்சார்த்திகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

சித்தியடையும்பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் தராதரப் பத்திரங்களை உலகின் சகல பகுதிகளிலும் பயன்படுத்தலாமென பரீட்சை ஆணையாளர் திரு. ஸ்ராலி பெரேரா தெரிவித்துள்ளார். (சிவ)

## புதிய சட்டத்தரணி



யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டியைச் சேர்ந்த துரைராசா பாலசுப்பிரமணியம் கொழும்பு உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களான திரு. பாரிந்தரணசிங்க திரு. ஆர். எஸ். வணசுந்தர, திரு எஸ். எம். செனிவிரத்ன ஆகியோர் முன்னிலையில் இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கைச் சட்டக்கல்லூரித் தமிழ் மாணவ மன்றத்தின் தலைவராகக் கடமையாற்றியுள்ளதுடன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

இவர் உடுப்பிட்டி, சமரபாகு, உலாந்தா வளவைச் சேர்ந்த துரைராசா மகேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரனுமார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முழுநேரக்கல்விப்பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி- 1986/1987

புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரிய சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்படிவங்களை ரூபா 10/- செலுத்திய பின் கல்விக்கிளைச் சிரேட்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 10 - 08 - 1986 ஆகும். தேர்வு நாடிகள் 31 - 08 - 1986 இல், 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
10 - 07 - 1986
[A 924]


## இ. த. ஆ. சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அவசரச் செயற்குழுக் கூட்டமொன்று நாளை சனிக்கிழமை காலையில் சங்கப பணிமனையில் நடைபெறும்.

சங்கத்தைத் தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமாகக் கணிக்கப்படுவதற்குக் கல்வி அமைச்சர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், இன்றைய சூழ்நிலையில் சங்கத்தின் பணிகளபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப் படுமென்று தெரிகின்றது.

# கூட்டணியின் ஞாயிறு கொழும்புப் பயணம்

சென்னை, ஜுலை 10

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேரடியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்புசெல்லவுள்ளனர்.

திரு அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு ஆர். சம்பந்தன் ஆகியோர கூட்டணி சார்பில் திரு ஜெயவர்த்தனவை சந்திப்பார்கள்.

கொழும்பில் ஒருவாரகாலம் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கு நடைபெறும் அரசியல் கட்சிமாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (து)

## மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம் வெள்ளி

சுண்டுக்குளி, கொக்குவில், வண்ணார்பண்ணை ஆகியதபால் நிலையங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தபால் சேவைகள் அனைத்தும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் தபால் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அண்மைய காலச் சம்பவங்கள் தொடர்பாக யாழ் பிரதம அஞ்சல் அலுவலகம் இயங்காத நிலையில், மேற்குறித்த தபாலகங்களும் செயலிழந்திருந்தமை தெரிந்ததே.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது, அன்ரனி இல்லம் முதலாம் இடத்தையும், தோமஸ் இல்லம் இரண்டாவது இடத்தையும், திலோகு இல்லம் மூன்றும் இடத்தையும் பொற்றுள்ளன

முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனப் எம் எம். மன்சூர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (வா-க)


## நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



பொன்னையா கதிர்காமர்
(முன்னை நாள் C. T. B சாரதி)

தோற்றம்; 07-02-1942
மறைவு; 14-06-1986

எமது குடுபத்தின் வழிகாட்டும் ஒளிவிளக்கை இழந்து நாம் கலங்கி நின்றபோது எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு 14-7-1986 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரி,
மச்சாள்,
மச்சான்மார்,
உறவினர்,
நண்பர்கள்.

முரசுமோட்டை,
பரந்தன். (C 3419)


## திருமலையில் மேற்கு ஜேர்மன் பத்திரிகையாளர்

திருமலை, வியா

திருமலைக்கு விஜயமொன்றை மேற்கொண்ட மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பத்திரிகையாளர் இருவர் அங்குநடைபெற்ற அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், அகதிகள் முகாம்களையும் சென்று பார்வையிட்டனர்.

இவ் விஜயத்தின் போது திருமலை அரச அதிபர் இணைப்பதிகாரி, பிரஜைகள் குழுத் தலைவர் ஆகியோரையும் சந்தித்து திருமலை நிலைமையைக் விளக்கமாகக் கேட்டறிந்தனராம். [சிவ]

## இராமேஸ்வரம் மீனவர்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவில் கரை ஒதுங்கிய இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்களும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் வி. கணபதியை நேற்றுப் பார்வையிட்டனர்.

கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் வி. கணபதியை பின்னர் கரையொதுங்கிய அவரது சகாக்கள் ஐவரும் நேற்றுப் போராளிகளின பாதுகாப்புடன் வந்து பார்வையிட்டனர். [மா]

## பெற்றோர்தின விழா

வட்டுக்கோட்டை,வியாழன்

சுப்பிரமணிய வித்தியாசாலையில் பெற்றோர்தின விழ நடைபெறவுள்ளது இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு கா. சந்திரராசாவும் சிறப்பு விருந்தினராக நா. வேலுப்பிள்ளையும் கலந்து கொள்ள விருக்கிறார்கள். எதிர் வரும் 19-ம் திகதி நடைபெற விருக்கும் இவ்விழ வில் பெற்றோர் சார்பில் திரு. ம. ந. சடம்பேசுவரன், திரு. நா. சிவலோகநாதன் ஆகியோர் உரையாற்றுவார்கள் சிறப்பம்சமாக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

## 'புதிய சகாப்தம் படைத்தவர்'

கொழும்புத்துறை வியா.

"அமரர் டானியல் எழுத்துலகில் புதிய சகாப்தம் படைத்தவர். சமுதாயப் பிரச்னைகளையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர் இலக்கியமாக்கினார் "

இவ்வாறு டாக்டர் சிவஞானசுந்தரம் (நந்தி) அச்சுவேலி பத்தமேனியில் நடைபெற்ற அமரர் டானியல் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு என். இராஜேந்திரன் தலைமையில் இக்கூட்டம்நடைபெற்றது கட்டுவன் புலம் மகாவித்தியாலய அதிபர் திரு. கே இராஜதுரை திரு.வளவை வளவன் திரு கே.ஜெகேந்திர போஸ், திரு. பா. குணராசா ஆகியோரும் பேசினர்.

## "உரை கூறுவதில் தனித்தன்மை பெற்றவர்"

சுழிபுரம், வியா.

"ஒழுக்கம், கல்வி, ஆசார சீலராக விளங்கிய யோகி கார்த்திகேசு தெய்வ அருளினால் நிறையக் கல்வியைப்பெற்றிருந்தார். கேட்பவர்கள் இன்புறும் வண்ணம் உரைகூறுவதில் யோகிஒருதனித்தன்மை வாய்ந்தவராக விளங்கி வந்தார் சொல் ஒன்று. செயல் வேறாக அல்லாமல் சொல்லியவாறு இறைவனை நம்பி வாழ்ந்தார்."

இவ்வாறு சுழிபுரம் பறளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனசபை செயலாளர் பிரம்ப ஸ்ரீ சு சண்முகரத்தினசர்மா, பறளை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற யோகி கா. கார்த்திகேசு நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்

புலவர் சு சுந்தரம்பிள்ளை பேசுகையில்: "யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு பெருமை தருவது கந்தபுராணம் என்றும் அதனை முழுமையாக கற்று பரப்பும் பணியை யோகியார் செய்துவந்ததை நாம் நன்றியோடு போற்ற வேண்டும் என்றார்

திரு. மு. தம்பியையா திரு. சி. அப்புத்துரை, ஆசிரியர் கே. நடராசா, திரு க வாமதேவன் ஆகியோர அஞ்சலி உரை நிகழ்த்தினர் வைத்திய கலாநிதி க. சிவராசா நன்றியுரை கூறினர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈராண்டுப் பகுதி நேரக் கல்விப் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி1986/1987

புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரிய சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை ரூபா 10 செலுத்திய பின் கல்விக்கிளைச் சிரேட்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

விண்ணப்ப முடிவு திகதி 10-08-1986 ஆகும் தேர்வு நாடிகள் 31 08-1986 இல், 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்

தெரிவு செய்யப்படுவோர் பல்கலைக் கழகத்திலிருந்து 25 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதோடு இக் கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் சடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திகதி: 10-07-1986.
[A 923]


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 11-7-86

# திருமலையில் இடம்பெயர்ந்த '300 அகதி குடும்பங்கள் குறித்து எவ்வித பதிவுமில்லை' அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருமலை மாவட்டத்திலிருந்து கடந்த ஜூன் மாதத்தில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அகதிகளாக வந்த சுமார் 300 குடும்பங்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் அகதிகளாக எவ்வித பதிவு செய்யப்படாததினால் மரங்களுக்கு கீழே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்திவு மாவட்ட பிரஜைகள் குழுவினர், புனர்வாழ்வுத்துறை அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரஜைகள் குழுவின் செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ள இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- இந்த 300 குடும்பங்களும் உரிய முறையில் பதியப்படாததினால் அவர்களுக்கு உணவு வகைகளோ தங்குமிட வசதியோ வழங்கப்படவில்லை. இதனால் முல்லைத்தீவு வீதிகளிலுள்ள மரங்களின் கீழ் தஞ்சமடைய வேண்டியுள்ளது.

''இந்நிலையில், இவர்களுக்கு குறைந்தது ஒரு நாளைக்கு ஒருநேர உணவாவது கிடைக்க வழி செய்யுமாறும், இவர்களுக்கு தங்குவதற்குரிய இட வசதி செய்து கொடுக்குமாறும் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கும் - முல்லைத்தீவு அரச அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (செ)

## வர்த்தகர் கைது

வவுனியா வியாழன்

வவுனியாவில் கறுப்புச் சட்டைக் காரர்களால் இரண்டு நாட்களுக்குமுன் வர்த்தகரான நடராஜா மனோகரன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

## அஞ்சலி

யாழ்ப்பாணம் வெள்ளி

ஆழ்கடலில் அகால மரணமடைந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) தோழமைப் போராளிகளுக்கு அஞ்சலியும் அனுதாபமும் தெரிவித்து 'தமிழ் ஈழ ராணுவம், ஆணைக்குழு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (மா)

## திறப்பு விழாவில் அமைச்சர் 'இராசு'

மட்டக்களப்பு வியாழன்

இந்து சமய கலாசார பிரதேச அபிவிருத்தி தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு செ இராசதுரை நீண்ட நாட்களின் பின் நேற்று முன்தினம் விமான மூலம் மட்டுநகர் வந்து திரும்பியுள்ளார்.

இவ் விஜயத்தின் போது அவர் சுமார் 80லட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட விபுலானந்தர் இசைக் கல்லூரி திறப்பு விழாவில் பங்குபற்றினர். (சிவ)

## சட்ட மாணவர்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், வெள்

வெளிவாரி சட்டப்பரீட்சையில் தோற்றவிருக்கும் வடபகுதி மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் இதுவரைகிடைக்கவில்லை.

ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள இம் மாணவர்கள் பலர் கடந்தவருடம் போக்குவரத்து சீர்கேட்டால் இப்பரீட்சைக்குதோற்றவில்லை.

இது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபர் கொழும்பு பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்பு கொண்டுள்ளார். [சிவ]

## கிராம சேவை அலுவலர்கள் கடத்தப்பட்டனர்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி கூட்டு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் அழைப்பின் பேரில் நேற்று கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு சென்று கொண்டிருந்த கிளிநொச்சி கிராம சேவை அலுவலர்கள்போராளிகளால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியில் 'சென்ரி' நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளே இக் கடத்தல் சம்பத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## தேசிய தொழில் பயிற்சிசபை
# தொழில் பயிலுநருக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம் புதன்

தேசிய தொழிற் பயிற்சி சபையால் கோரப்பட்டிருந்த தொழில் பயிலுநருக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 15 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அச்சகப்பகுதி சம்பந்தமான 'புக் பைண்டிங்', மெசின் மைண்டர், கொம்போஸிட்டர்,மற்றும் கணக்கியல் சம்பந்தமாக மலவிதத் தொழில்களைப் பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டிருந்தது தெரிந்ததே.

குறிப்பாக யாழ் குடாநாட்டிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு இப்பகுதியிலேயே தொழில் பயில வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதுடன் தொழில்கள் பயிலும் காலத்தில் சபையால் 300 ரூபா வேதனம் வழங்கப்படும் என்றும் 'தேசிய தொழிற் பயிற்சி சபை' உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரமளவில் சகலருக்கும் அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பரீட்சை ஆகஸ்ட் 1ம் திகதி ஆரம்பமாகி 25 ம் திகதிவரை நடைபெறவுள்ளது, (சிவ)

## துப்பாக்கி சூட்டில் காயம்

யாழ்ப்பாணம், வெள்ளி,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த லொறியின் கிளினர் எஸ் ராஜகே பால் [மெச்சுவில்] இராணுவத்தினரால் சுடப்பட்டு காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் [ஐ]

## உ. அ. அதிபர் பிரிவு

முல்லைத்தீவு. வியாழன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்தாவது உதவி அரசாங்க அதிபர் பிரிவாக புதிதாக ஒட்டுசுட்டானில் கற்சிலைமடு, மன்னகண்டல், ஒலுமடு, மணவாளன், பட்டமுறிப்பு, மாங்குளம், ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி அமைய உள்ளது.

தற்காலிகமாக ஒட்டுசுட்டான் சுமநலசேவையில் இது இன்னும் மூன்று மாதகால இடைவெளிக்குள் இயங்குமென கச்சேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

## பிரஜைகள் குழுவிலிருந்து பதவி நீக்கம்

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் திரு சி கனகசபை, பொருளாளர் திரு அந்தோனிப்பிள்ளை ஆகியோர் பிரஜைகள் குழு நிர்வாகத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தற்காலிக தலைவராக ச. முத்தையா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சாம்பல்தீவிலிருந்து அகதிகள் யாழ். வந்தனர்

அச்சுவேலி, வியாழன்

திருகோணமலையிலிருந்து மேலும் பலர் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். கடந்தவருடம் நடைபெற்ற கலவரங்களின் பின்பும் தமிழர்கள் செறிந்துவாழ்ந்த ஒரே கிராமமான சாம்பல்தீவில் இருந்தே இப்பொழுது மக்கள் வெளியேறி வருகின்றனர்.

சாம்பல்தீவைச் சுற்றியிருக்கும வில்கம்விகாரை, இருக்கண்டி அலஸ்தோட்டம், சன்னியா ஆகிய நாலு இராணுவ முகாம்களில்இருந்தும் இராணுவத்தினர் அடிக்கடி தேடுதல்களை மேற்கொண்டு இக்கிராமத்தினுள் சிறுவர், முதியவர்களைக் கூட இம்சிக்கும் சம்பவங்கள் அதிகரித்தமையாலேயே மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியேறி வருவதாகவும் கூறினர்கள்.

தாங்கள் பல சிரமங்களை அனுபவித்து முல்லைத்தீவு மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்ததாக அகதிகள் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

பத்தைமேனி, நீர்வேலி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் பத்தைமேனி, இடைக்காடு, நீர்வேலிப்பகுதி பிரஜைகள் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

## கல்விபணிப்பாளர் விடுதலை

முல்லைத்தீவு. வியாழன்

முல்லைத்தீவு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் இனம் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு கடந்த 7 ம் தேதி பஸ்ஸில் செல்லும்போது விசுவமடுவுக்கு சமீபத்தில்கடத்த பட்ட இவர் பின்விடுதலைசெய்யப்பட்டார்.

## பூவரசம் குளத்தில்
# தேடுதல் வேட்டையில் 3 விவசாயிகள் பலி

வவுனியா, வியாழன்

வவுனியா செட்டிகுளம், பறையனாலங்குளம் ஆகிய பகுதிளிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பூவரசங்குளம் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தியதில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த மூன்று விவசாயிகள் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்கள்.

இத்தேடுதலின் போது சுமார் 500பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின் 6 இளைஞர்கள் மாத்திரம் இராணுவத்தினரால் முகாமுக்குக் கூட்டிச்செல்லப்பட்டுள்ளதாக பிரஜைகள் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 3 பேரின் பெயர்கள் தெரியவந்துள்ளது. க இராமநாதன் [25 வயது], தருமராசா [30 வயது], வி. கேதாரலிங்கம் [30வயது] [ஐ]

## கிளிநொச்சி அகதிகள்

சாவகச்சேரி, வியாழன்

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டப் பிரதேசங்களின் பல இடங்களிலும் அகதிகளாக இருக்கின்ற சுமார 6500 பேருக்கு அரசு எவ்வித உதவியையும் இன்று வரை அளிக்காமல் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக, இவ்வாறு யாழ் மாவட்டப் பிரதேசங்களுக்கு, கிளிநொச்சியில் இருந்து வந்த அகதி மக்கள் தமது அன்றாட உணவுத் தேவைக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

சீதனப்பிரச்னைக்கு காரணம் ஆணா, பெண்ணா? என்னும் பொருள்பற்றி யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் விரிவுரையாளர் ராஜ்மோகன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சமூகவிஞ்ஞான கல்வி வட்டம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

0 0 0

ஊர்காவற்றுறை, வியாழன்.

அராலிப் பாலத்தால் யாழ்ப்பாணத்துக்குப் போக்குவரத்துச் செய்யும் தீவுப்பகுதி மக்கள் படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் முகமாக இன்று 11 ம் தேதிகாலை யாழ் செயலகத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

## இரு சடலங்கள்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு வாவியில் சூட்டுக் காயங்களுடன் இருவரின் சடலங்கள் நேற்று மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (மா)

## கொள்ளை

யாழ்ப்பாணம், வெள்ளி.

கோப்பாய் தெற்கு நாவடியில் உள்ள ஒரு வீட்டில் முகமூடியணிந்த கொள்ளையர்கள் ஓட்டை பிரித்து உட்சென்று பெறுமதிமிக்க பொருட்களை கொள்ளையடித்துள்ளனர்)

இவ் வீட்டில் முன்பும் ஐந்து தடவைகள் கொள்ளையிட முயற்சித்தும் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

# நேரடி மோதலின்போது படையினர்முகாம்திரும்பினர்
## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் ராணுவ முகாமிருந்து நடைபவனியாக புறப்பட்ட ராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எதிர்கொண்டு தாக்குத நடத்தியதில் பலத்த சேதத்துடன் மீண்டும் முகாம் நோக்கித் ராணுவத்தினர் திரும்பியதாக 'தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செட்டிகுளம் ராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் ராணுவத்தினர் நடைபவனியாக புறப்பட்டனர்.

இலுப்பங்குளம் பகுதியை முற்றுகையிடுவதற்காக பூவரசங்குளம் வழியாக வந்து கொண்டிருந்தபொழுது விடுதலைப் புலிகள் ராணுவத்தினரை முன்னேற விடாது எதிர்கொண்டு தாக்குதல் நடாத்தினர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது இருதரப்பினருக்குமிடையே கடும் சமர் ஏற்பட்டது

ராணுவத்தினர் உயிர் இழப்புகளுடனும தேடுதல் நடவடிக்கையைக் கைவிட்டு மீண்டும் முகாம் நோக்கித் திரும்பினர்.

இத் தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை என்று அவ்வறிக்கை கூறுகிறது. (மா)

## இன்று பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி.

யாழ். பெரியகடை பாரதி பாஷிய வித்தியாலய கல்விப் பொருட்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகும். பாடசாலை அதிபர் சைவப்புலவர் திரு. க சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இப் பொருட்காட்சியை பிரதம விருந்தினர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் ஆரம்பித்து வைப்பார் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பபாடசாலைக் கல்வி அலோசகர் திருமதி அ இரகுநாதன், யாழ் வர்த்தக சங்கச் செயலாளர் திரு. எஸ் சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம் வெள்ளி

ஏழாலை, அம்பலவாணேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா நளை 12 ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## வாகன கடத்தல் முறியடிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி.

புலிகள் இயக்க இரவு ரோந்துப்பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு மல்லாகத்தில் இளைஞர்குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட வாகனக்கடத்தல் முறியடிக்கப்பட்டு அக்குழுவின் தலைமைப்பீடத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.